**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | |
|---|---|
| Case Number | : CC.No.12/2024 |
| Deposition of Witness for | : PW – 1 |
| Name and Age | : முனியப்பன் (வயது 55) |
| Father / Husband Name | : தாண்டவன் |
| Occupation | : விவசாயம் |
| Village | : பெரியதோப்பு |
| Taluk | : பாலக்கோடு |

**நாள்** – 14.05.2026

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**Accused present.**

**PW– 1**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது பெரியதோப்பில் குடியிருந்துக்கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். எந்த தேதியில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. ஆஜர் எதிரி எனது தம்பி ஆவார். போலிசார் என்னை விசாரித்தார்கள். எதற்காக விசாரித்தார்கள் என்று தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். கையொப்பம் அ.சா.ஆ1–ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(அரசு தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சி செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னுடன் பிறந்தவர்கள் மூன்று பேர், நாங்கள் நான்கு பேர் அண்ணன் தம்பிகள் என் தம்பிகள் 2016ல் பணம் சம்மந்தமாக என்னுடன் பேசாமல் இருந்தார்கள் அப்போது பேசாமல் தான் இருந்தார்கள். 16.01.2016ம் தேதி இரவு சுமார் 10.30மணிக்கு நான் விநாயகர் கோவில் அருகே இருந்தபோது ஊர்கவுண்டர் ராஜி என்னுடன் பேசிக்கொண்டிருந்தார் அப்போது ஆஜர் எதிரி மணி ராஜியிடம் இங்க வந்து எதுக்கு பேசிட்டு இருக்கீங்க என்று திட்டினார் என்றும், ராஜி அங்கிருந்து சென்றுவிட்டார் என்றும், அதைகுறித்து நான் எதிரி மணியிடம் கேட்டபோது நீ யாருடா என்னை கேட்பதற்கு தேவிடியா பையா என்று ஆஜர் எதிரி கெட்டவார்த்தையில் திட்டி என் இடது காதின் மேல் சதையை கடித்து துப்பிவிட்டார் என்றும், பின் கல்லால் எனது இடது அல்லையின் மீது

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.14 17:29:19 +0530

அடித்து காயப்படுத்தினார் என்றும், கையால் வலது தோள்பட்டையின் மீது அடித்தார் என்றும், பின் எதிரி மணி கொடுவாளை காட்டி என்னை கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார் என்று போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது இடது காதில் மேல் பகுதி சதை இல்லாமல் இருப்பது சம்பவத்தின்போது ஏற்பட்டது தான் நான் தற்போது எதிரி என் தம்பி என்பதால் அவருக்கு சாதகமாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

குறுக்கு விசாரணை இல்லை.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.14 17:29:28 +0530

Judicial Magistrate,
Palacode.

**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | |
|---|---|
| Case Number | : CC.No.12/2024 |
| Deposition of Witness for | : PW – 2 |
| Name and Age | : ராஜம்மாள் (வயது 75) |
| Father / Husband Name | : க/பெ. தாண்டவம் |
| Occupation | : விவசாயம் |
| Village | : பெரியதோப்பு |
| Taluk | : பாலக்கோடு |

**நாள்** – 14.05.2026

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**Accused present.**

**PW– 2**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது பெரியதோப்பில் குடியிருந்துக்கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். எந்த தேதியில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. ஆஜர் எதிரி என் மகன் ஆவார். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சி செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 எனது மகன் ஆவார் மற்றும் ஆஜர் எதிரி எனது மகன் ஆவார் எனக்கு நான்கு மகன்கள் 2016–ல் பணம் சம்மந்தமாக என் மகன் முனியப்பனுடன் மற்ற பிள்ளைகள் பேசாமல் இருந்தார்கள், 16.01.2016ம் தேதி இரவு சுமார் 10.30மணிக்கு என் மகன் முனியப்பன் விநாயகர் கோவில் அருகே இருந்தபோது ஊர்கவுண்டர் ராஜி என் மகன் முனியப்பனுடன் பேசிக்கொண்டிருந்தார் அப்போது ஆஜர் எதிரி மணி ராஜியிடம் இங்க வந்து எதுக்கு பேசிட்டு இருக்கீங்க என்று திட்டினார் என்றும், ராஜி அங்கிருந்து சென்றுவிட்டார் என்றும், அதைகுறித்து என் மகன் முனியப்பன் எதிரி மணியிடம் கேட்டபோது நீ யாருடா என்னை கேட்பதற்கு தேவிடியா பையா என்று ஆஜர் எதிரி கெட்டவார்த்தையில் திட்டி என் மகன் முனியப்பனின் இடது காதின் மேல் சதையை கடித்து துப்பிவிட்டார் என்றும், பின் கல்லால் என் மகன் முனியப்பன் இடது அல்லையின் மீது அடித்து காயப்படுத்தினார் என்றும், கையால் வலது தோள்பட்டையின் மீது அடித்தார் என்றும், பின் எதிரி மணி

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.14 17:29:35 +0530

கொடுவாளை காட்டி என் மகன் முனியப்பனை கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார் என்றும் அதை நான் நேரில் பார்த்தேன் என்றும் போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என் மகன் முனியப்பனின் இடது காதில் மேல் பகுதி சதை இல்லாமல் இருப்பது சம்பவத்தின்போது ஏற்பட்டது தான் நான் தற்போது எதிரி என் மகன் என்பதால் அவருக்கு சாதகமாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

குறுக்கு விசாரணை இல்லை.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.14 17:29:42 +0530

Judicial Magistrate,
Palacode.